FMM SRI LANKA
නිදහස් මාධ්‍ය ව්‍යාපාරය
சுதந்திர ஊடக இயக்கம்
Free Media Movement

# මාධ්‍ය නිදහස: නිරීක්ෂණ වාර්තාව
# ஊடக சுதந்திரம்: கண்காணிப்பு அறிக்கை
# Media Freedom Rights Monitoring Report

MFRMD

2023 மார்ச்

Vol. 03 - தொகுதி 03


போராட்டத்தின் செயற்பாட்டாளர் 10 மாதங்களின் பின்னர் கைது.


சாந்த விஜேசூரிய பொலிஸாரினால் தாக்கப்பட்டமை.



கூப்பாடு இட்டு எதிர்ப்பு தெரிவித்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது.

ஊடக சுதந்திரம் குறித்து மார்ச் மாதத்தில் நிகழ்ந்த சம்பவங்கள் மற்றும் கடந்தகால சம்பவங்களின் வளர்ச்சிப்போக்குகள் மற்றும் அந்தச் சம்பவங்கள் தொடர்பான அவதானிப்புகள் இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். ஊடகவியலாளர்கள் மற்றும் பொதுமக்களின் கருத்துச் சுதந்திரம் மற்றும் பேச்சுச் சுதந்திரம் தொடர்பான நிகழ்வுகள் மற்றும் புதிய சட்ட உருவாக்கம், சட்டச் சீர்திருத்தங்கள், சட்டத் திருத்த முன்மொழிவுகளுக்கான தேசிய மற்றும் சர்வதேச கருத்துகள் போன்றவற்றிலும் இந்த அறிக்கை கவனம் செலுத்துகிறது. ஊடக சுதந்திரம் மற்றும் ஊடக உரிமைகள் தொடர்பில் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகச் சுதந்திர ஊடக இயக்கம் தேர்ந்தெடுத்துள்ள பகுதி கூறுகள் மற்றும் நோக்கங்களுக்கு அமைய 21 நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள் மார்ச் 2023 அறிக்கையில் உள்வாங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இவற்றில் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் தொடர்பான 10 சம்பவங்கள், சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுப்பாடுகள் தொடர்பான 07 சம்பவங்கள், கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள் தொடர்பான 04 சம்பவம் என மொத்தம் 21 நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள் இம்மாதத்தில் அவதானிக்கப்பட்டுள்ளன.

## மார்ச் மாதத்தில் கண்காணிக்கப்பட்ட சம்பவங்கள்:

1. தேசிய மக்கள் சக்தி ஏற்பாட்டில் மேற்கொள்ளப்பட்ட போராட்டம்மீதான தாக்குதல் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு இரு முறைப்பாடுகளை சமர்ப்பிக்கப்பட்டமை.
2. தேர்தலுக்காக ஒதுக்கப்பட்ட பணத்தைத் தடுத்து வைத்தமை தொடர்பில் நிதியமைச்சின் செயலாளருக்கு உச்ச நீதிமன்றம் தடை உத்தரவொன்றை பிரப்பித்தமை.
3. கண்டி கோட்டாகோகமவைச் சேர்ந்த செயற்பாட்டாளர் ஒருவர் குற்றவியல் விசாரணைத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டமை.
4. சமூக ஊடக செயற்பாட்டாளர் மனோரம வீரசிங்க, விசாரணைக்காகக் குற்றவியல் விசாரணைத் திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டமை.
5. இலங்கையில் கருத்துச் சுதந்திரத்திற்கு எதிரான முக்கிய ஆயுதமான கண்ணீர்ப்புகைப் பிரயோகம் தொடர்பான ஆய்வு அறிக்கை, சமூக மற்றும் அமைதிக்கான மையத்தில் (CSR) வெளியிடப்பட்டமை.
6. தம்புள்ளை பிராந்திய ஊடகவியலாளர் நிமல் ஜயரத்னவுக்கு தொலைபேசியில் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டமை.
7. கொழும்பு பல்கலைக்கழகத்திற்குள் பொலிசார் கண்ணீர் புகை குண்டுகளை வீசியதுடன் பொலிஸ் கலகத் தடுப்பு அதிகாரிகள் பல்கலைகழகத்திற்குள் உட்பிரவேசித்தமை.
8. கொழும்பு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் மீது பொலிஸார் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரை பிரயோகம் மேற்கொண்டமை.

9. களனி பல்கலைக்கழகத்திற்கு முன்பாக மாணவர்கள் ஏற்பாடு செய்திருந்த ஆர்ப்பாட்டம்மீது பொலிஸார், நீர் மற்றும் கண்ணீர்ப்புகை தாக்குதல் நடத்தியதோடு 6 மாணவர்களைக் கைது செய்தமை.

10. போராட்டத்தின்போது பயன்படுத்தப்பட்ட கண்ணீர் புகையின் தரம் மற்றும் எப்படி பயன்படுத்தப்பட்டது என்பது குறித்து அறிக்கை அளிக்குமாறு காவல்துறைக்கு நீதிமன்றம் உத்தரவிட்டமை.

11. போராட்டத்தை அறிக்கையிடச் சென்ற சமூக ஊடக ஆர்வலர் ஒருவரை தொலைக்காட்சி அலைவரிசையில் பணிபுரியும் பத்திரிக்கையாளர்கள் சிலர் இடையூறு விளைவித்தமை.

12. போராட்டங்களைக் கலைக்க பொலிசார் பயன்படுத்திய கண்ணீர்ப்புகை மற்றும் நீரின் தரம்குறித்து தகவல்களை பெற்றுத்தருமாறு சட்டத்தரணிகள் குழு ஒன்று பொலிஸ் தலைமையகத்தில் இரு கோரிக்கைகளைக் கையளித்தமை.

13. அண்மையில் இடம்பெற்ற மக்கள் போராட்டத்தின்போது கண்ணீர் புகை வீசப்பட்டமை தொடர்பில் பொலிஸ் தலைமையகத்திடமிருந்து தகவல்களைக் கோரி தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் விண்ணப்பித்துள்ளமை.

14. சமூக ஊடகங்களில் வெளியிடப்பட்ட காணொளி தொடர்பில் தனது உயிருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகச் சமூக ஊடக ஆர்வலர் ஒருவர் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளமை.

15. சியத தொலைக்காட்சியின் "டெலிவெகிய" நிகழ்ச்சியின் மூலம் பாராளுமன்ற சிறப்புரிமைகள் மீறப்பட்டதாகக் குறிப்பிட்டு அது தொடர்பில் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டமை.

16. அமைச்சர் பந்துல குணவர்தனவை கூப்பாடு இட்டு தனது எதிர்ப்பை தெரிவித்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டமை.

17. இலங்கை தொலைக்காட்சி கூட்டுத்தாபனத்தில் பணியாற்றும் ஊழியர்கள் தாமாக முன்வந்து பதவி விலகும் வேலைத்திட்டம் ஒன்றை அறிவித்துள்ளமை.

18. கோட்டாகோகம மற்றும் மைனாகோகம மீதான தாக்குதல் தொடர்பில் தேசபந்து தென்னகோனை சந்தேக நபராகப் பெயரிடுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு நிராகரிக்கப்பட்டமை.

19. வசந்த முதலிகே விடுதலை செய்யப்பட்டமைக்கு எதிராகச் சட்டமா அதிபர் உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீட்டை மேற்கொண்டமை.

20. இணையதளம் ஒன்றில் வெளியான செய்தி தொடர்பாக, அதன் ஆசிரியர் குற்றவியல் விசாரணைத் திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டமை.

21. மிரிஹானவில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் தொடர்பில் அறிக்கையிட்டுக்கொண்டிருந்த ஊடகவியலாளர் சாந்த விஜேசூரியவை பொலிஸ் அதிகாரிகள் சிலர் தாக்கியதனை தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மூன்று ஆர்ப்பாட்டக்காரர்களை கைது செய்தமை.

**அட்டவணை எண்: 01 அறிக்கையிடப்பட்ட மொத்த சம்பவங்களின் எண்ணிக்கை – 2023 மார்ச் மாதம்**

| உள்ளடக்கப்பட்டுள்ள ஆக்கக் கூறுகள் | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் | 10 |
| சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுப்பாடுகள் | 07 |
| கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள் | 04 |
| **மொத்தம்** | **21** |

## பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம்

**ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் எனப்படுவது ஊடகவியலாளர்கள் தங்களது தொழிலை உடல் மற்றும் மனதை ஒர்முகப்படுத்தி சுயாதீனமாகத் தமது ஊடக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான சுதந்திர மற்றும் சுயாதீன சூழலை உருவாக்குதல் ஆகும். இது ஊடக சுதந்திரத்தின் அடிப்படை காரணியாகவும் காணப்படுகின்றது. அதே சமயம், ஊடகச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் ஆகியவற்றைப் பாதுகாக்க வேண்டுமாயின், குடிமக்கள் ஊடகங்களில் அல்லது வேறு வழிகளிலிருந்து எதிர்விளைவுகளுக்கு உள்ளாகாமல் அல்லது தனது பாதுகாப்பிற்கு எவ்வித பாதிப்புக்களையும் எதிர்கொள்ளாமல் சுதந்திரமாகத் தனது கருத்தை வெளிப்படுத்தும் சூழல் உருவாக வேண்டும். கருத்துச் சுதந்திரம் என்பது அமைதியான முறையில் ஒன்றுகூடல், அமைதியான முறையில் போராட்டம் மேற்கொள்ளல் மற்றும் எதிர்ப்பு தெரிவித்தல் போன்ற உரிமைகளை உள்ளடக்கியதாகும். இவ்வடிப்படை உரிமைகள் மீறப்பட்ட 10 சம்பவங்கள் மார்ச் மாதத்தில் அவதானிக்கப்பட்டன. அமைதியான முறையில் மேற்கொள்ளப்படும் போராட்டங்களுக்கு எதிராகப் பொலிசார் சட்டத்திற்கு புறம்பாக அதிகாரத்தை உபயோகித்தல் என்ற போக்கு வளர்ச்சி அடைந்து வருவதுடன் போராட்டத்தின் மீது பிரயோக்கிக்கப்பட்ட கண்ணீர் புகை தாக்குதல் காரணமாக ஒருவர் உயிரிழந்தமையும் குறிப்பிடத்தக்கது.**

**அட்டவணை 2: 2023 மார்ச் மாதம்: ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் – சம்பவங்கள் 10**

| குறிகாட்டி | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| உயிரிழப்பு/கொலை | 01 |
| தாக்குதல் | 03 |
| உளவியல் ரீதியான துஷ்பிரயோகம் | 06 |
| **மொத்தம்** | **10** |

1. **சமூக ஊடக செயற்பாட்டாளர் மனோரம வீரசிங்க, விசாரணைக்காகக் குற்றவியல் விசாரணைத் திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டமை.**

மார்ச் 7ஆம் திகதி குற்றவியல் விசாரணைத் திணைக்களத்திற்கு அழைக்கப்பட்ட அவர், சமூக ஊடகங்களில் வெளியிடப்பட்ட கருத்து தொடர்பில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். இதற்கு முன்பும் ஒருமுறை அவரிடம் இதுபோல் விசாரணை மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. ஊடகச் சட்ட மன்றம் சமூக ஊடக ஆர்வலர்களின் உரிமைக்காக குரல் கொடுத்துவருகின்றது.

ஆதாரம்: MFRM Desk

2. **தம்புள்ளை பிராந்திய ஊடகவியலாளர் நிமல் ஜயரத்னவுக்கு தொலைபேசியில் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டமை.**

இராணுவ அதிகாரிகள் புதையல் தோண்டப்பட்ட சம்பவம் தொடர்பில் ஊடகங்களில் அறிக்கையிடப்பட்ட விதத்தில் திம்புலாகன ஆரண்ய சேனாசன பிக்குகள் புதையல் தோண்டப்பட்ட சம்பவம் தொடர்பில் அறிக்கையிட தவறினால் ஊடகவியலாளர் மற்றும் அவரது குடும்பத்தினர்கள் கொல்லப்படுவார்கள் என அந்த அச்சுறுத்தல் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. கடந்த மார்ச் மாதம் 5ஆம் திகதி இரவு 8 மணியளவில் இராணுவ வீரர் போன்று கதைத்த நபர் ஒருவர் இந்த அச்சுறுத்தலை விடுத்துள்ளதுடன், அந்த அழைப்பைப் பதிவு செய்த ஊடகவியலாளர் இது தொடர்பில் மனம்பிட்டிய பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

ஆதாரம்: MFRM Desk

3. **கொழும்பு பல்கலைக்கழகத்திற்குள் பொலிசார் கண்ணீர் புகை குண்டுகளை வீசியதுடன் பொலிஸ் கலகத் தடுப்பு அதிகாரிகள் பல்கலைகழகத்திற்குள் உட்பிரவேசித்தமை.**

மார்ச் 7ஆம் திகதி கொழும்பு லிப்டன் சுற்றுவட்டத்திலிருந்து ஆரம்பமான எதிர்ப்பு பேரணி கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீடத்தை அண்மித்தபோது பொலிசார் எதிர்ப்பு பேரணி மீது தண்ணீர் மற்றும் கண்ணீர் புகை தாக்குதல் மேற்கொண்டதுடன் பாதுகாப்பிற்காகப் பல்கலைகழகத்திற்குள் உட்சென்ற மாணவர்களைத் துரத்தித் தடியடி தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர். சட்ட பீடத்தில் கற்கை நெறியில் ஈடுபட்டிருந்த மாணவர்களும் கண்ணீர் புகைக்குண்டு வீச்சினால் பாதிக்கப்பட்டதுடன், பல்கலைக்கழக உள்ளக பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. சீருடை அணிந்து, மரத்தடி மற்றும் இரும்பு கம்பிகளை ஏந்திய குழுவொன்று போராட்டத்தை அடக்குவதற்காக அழைக்கப்பட்டமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியதுடன், அந்தக் குழுவினர் இராணுவத்தை சேர்ந்தவர்கள் அல்ல எனவும் இராணுவ பேச்சாளர் தெரிவித்துள்ளார். பல்கலைக்கழகத்திற்குள் பொலிஸார் பிரவேசித்தமை மற்றும் தாக்குதல் மேற்கொண்டமை தொடர்பில் பல்கலைக்கழக ஆசிரியர் சங்க சம்மேளனம் கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது.

ஆதாரம்: sinhala.adaderana.lk, www.youtube.com

4. **கொழும்பு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் மீது பொலிஸார் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரை பிரயோகம் மேற்கொண்டமை.**

அனைத்து பல்கலைகழக மாணவர் ஒன்றியம் மார்ச் 07 ஆம் திகதி கொழும்பில் ஏற்பாடு செய்திருந்த போராட்டத்தின் மீது போலீசார் நடாத்திய தாக்குதல் மற்றும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் கலைப் பீடத்திற்குள் கலகத் தடுப்பு அதிகாரிகள் பிரவேசித்தமைக்கு எதிராகவும் மார்ச் 8ஆம் திகதி இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. குறித்த போராட்டத்தின் மீது மூன்று தடவைகள் பொலிஸார் கண்ணீர் புகை மற்றும் நீர்த்தாரைகை தாக்குதல் மேற்கொண்டமையால் பாடசாலை மாணவர்களும் பொதுமக்களும் பாதிக்கப்பட்டனர்.

ஆதாரம்: sinhala.newsfirst.lk

5. **களனி பல்கலைக்கழகத்திற்கு முன்பாக மாணவர்கள் ஏற்பாடு செய்திருந்த ஆர்ப்பாட்டம்மீது பொலிஸார், நீர் மற்றும் கண்ணீர்ப்புகை தாக்குதல் நடத்தியதோடு 6 மாணவர்களைக் கைது செய்தமை.**

களனிப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் கலும் முதன்நாயக்க மற்றும் டில்ஷான் ஹர்ஷன ஆகியோர் தடுத்து வைக்கப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து மார்ச் 8ஆம் திகதி மாலை இந்த ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது. பல தடவைகள் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரை பிரயோகங்களை மேற்கொண்ட பொலிஸார், கைது செய்யப்பட்ட 6 மாணவர்களையும் மஹர நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்திய பின்னர், ரூபா. தலா 50,000 பிணையில் விடுவிக்கப்பட்டனர். இந்த வழக்கு ஜுலை 13ம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

ஆதாரம்: www.youtube.com

6. **போராட்டத்தை அறிக்கையிடச் சென்ற சமூக ஊடக ஆர்வலர் ஒருவரை தொலைக்காட்சி அலைவரிசையில் பணிபுரியும் பத்திரிக்கையாளர்கள் சிலர் இடையூறு விளைவித்தமை.**

“டோக் வித் லால்“ என்ற யூடியூப் சேனலை நடத்தும் சமூக ஊடக ஆர்வலரான லால் பெரேரா, மார்ச் 22 அன்று புறக்கோட்டையில் நடைபெற்ற போராட்டத்தைப் அறிக்கையிட்டுக் கொண்டிருக்கும்போது இந்தச் சம்பவத்தை எதிர்கொண்டார். “அரச ஊடக அடையாள அட்டை கொண்ட ஊடகவியலாளர்“ எனத் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட ஒருவர், லால் பெரேராவிடம் ஊடக அடையாள அட்டை இருக்கிறதா என்று கேள்வி எழுப்பி, அவரது கைத்தொலைபேசியைப் பிடுங்கி, செய்தி அறிக்கையிடுவதைத் தடுத்தார். பின்னர் மற்ற பத்திரிகையாளர்கள் தலையிட்டுச் சம்பவத்தைச் சமரசம் செய்தனர். இலங்கையில் ஊடகவியலாளர் அடையாள அட்டை தொடர்பில் சர்ச்சைக்குரிய சூழல் நிலவும் அதே நேரம், ஊடகவியலாளர்களாகப் பணியாற்றுவதற்கு அடையாள அட்டை வைத்திருக்க வேண்டிய கட்டாயம் ஏதும் இல்லை.

ஆதாரம்: sinhala.asianmirror.lk

7. **சமூக ஊடகங்களில் வெளியிடப்பட்ட காணொளி தொடர்பில் தனது உயிருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகச் சமூக ஊடக ஆர்வலர் ஒருவர் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளமை.**

காலிமுகத்திடல் போராட்டத்தின் செயற்பாட்டாளரும் சமூக ஊடகத் தொடர்பாளருமான ஷஷிக திஸாநாயக்கவினால் மார்ச் 14ஆம் திகதி இந்த முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டது. கடந்த மார்ச் 7ஆம் திகதி கொழும்பில் அனைத்து பல்கலைகழக மாணவர் ஒன்றியம் நடத்திய போராட்டத்தைக் கலைக்க வந்த இராணுவத்தினர் தடியடி நடத்திய காட்சிகளை அவர் தனது முகநூல் பக்கத்தில் பதிவிட்டிருந்தார். அந்தப் பதிவிற்கு பிறகு, தன்னைக் கடத்திச் சென்று உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தத் திட்டம் காணப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

ஆதாரம்: www.youtube.com

8. **இணையதளம் ஒன்றில் வெளியான செய்தி தொடர்பாக, அதன் ஆசிரியர் குற்றவியல் விசாரணைத் திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டமை.**

ravanalankanews.lk இணையத்தளத்தின் ஆசிரியர் நிஷங்க மாயாதுன்னே, கடந்த மார்ச் மாதம் 28ஆம் திகதி குற்றவியல் விசாரணைத் திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டு, பாதுகாப்புச் செயலாளர், பொலிஸ் மா அதிபர் மற்றும் சிறைச்சாலைத் தலைவர் தொடர்பில் வெளியிடப்பட்ட செய்தி சம்பந்தமாகக் அவரிடம் கேள்வி எழுப்பட்டுள்ளது. 3 - மணி நேரத்திற்கும் மேலாக அவரிடம் விசாரணை நடத்தப்பட்டதாகவும், அது குறித்த தகவல் எப்படி கிடைத்தது என்று அவரிடம் கேட்கப்பட்டதாகவும், ஆனால் அதை வெளியிட மறுத்ததாகவும் அவர் கூறினார்.

ஆதாரம்: www.facebook.com/Newspedia.lk

9. **சியத தொலைக்காட்சியின் "டெலிவெகிய" நிகழ்ச்சியின் மூலம் பாராளுமன்ற சிறப்புரிமைகள் மீறப்பட்டதாகக் குறிப்பிட்டு அது தொடர்பில் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டமை.**

இது தொடர்பில் ஆராய்வதற்காகச் சபாநாயகரால் நியமிக்கப்பட்ட தெரிவுக்குழுவின் அறிக்கை தொடர்பில் கடந்த மார்ச் மாதம் 21ஆம் திகதி பாராளுமன்றத்தில் காரசாரமான விவாதம் இடம்பெற்றது. சிறப்புரிமை எவ்வாறு மீறப்பட்டது என்பது குறித்த அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை எனவும், குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஊடகவியலாளர் தனது கருத்துக்களை தெரிவிக்க சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை எனவும் பாராளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். அரச சட்டத்தரணி நடேசனின் வழக்கை மேற்கோள்காட்டி ஊடகங்களுக்கு விமர்சிப்பதற்கும், கருத்துக்களை வெளியிடுவதற்கும் உரிமை காணப்படுவதாகவும் சட்டமா அதிபர் இந்த அறிக்கையில் அதனைக் குறிப்பிட்டுள்ளதாகவும் பா.உ லக்ஸ்மன் கிரியெல்ல குறிப்பிட்டார். இந்த அறிக்கையைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்குப்படுத்தல் ஆணைக்குழு மற்றும் சட்டமா அதிபருக்கு அனுப்பும் பரிந்துரையும் கடுமையாக விமர்சிக்கப்பட்டது.

ஆதாரம்: www.youtube.com

10. **மிரிஹான இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் தொடர்பில் அறிக்கையிட்டுக்கொண்டிருந்த ஊடகவியலாளர் சாந்த விஜேசூரியவை பொலிஸ் அதிகாரிகள் சிலர் தாக்கியதனை தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மூன்று ஆர்ப்பாட்டக்காரர்களை கைது செய்தமை.**

மிரிஹான பகுதியில் காலிமுகத்திடல் போராட்ட ஆர்வலர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த வேளையில் பெருமளவிலான பொலிஸ் அதிகாரிகள் தமது பலத்தை பிரயோகம் செய்து போராட்டக்காரர்களைக் கலைக்க முற்பட்டபோது அங்குப் பதற்றமான சூழல் ஏற்பட்டது. இந்த நிகழ்வைப் படமாக்கிக் கொண்டிருந்தபோது, சாந்த விஜேசூரிய தாக்கப்பட்டார். அனுருத்த பண்டார, தானிஷ் அலி மற்றும் சுதார என்ற செயற்பாட்டாளர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பின்னர் எவ்வித குற்றச்சாட்டுகளுமின்றி விடுவிக்கப்பட்டனர்.

ஆதாரம்: www.youtube.com

## சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுப்பாடுகள்

**மார்ச் மாதத்தில் ஊடக சுதந்திரம் தொடர்பான சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுப்பாடுகள் என்ற ஆக்கக் கூறுக்குள் உள்ளடங்கும் 07 சம்பவங்கள் அவதானிக்கப்பட்டன. பல்வேறு வழிகளில் பேச்சு சுதந்திரத்துக்கு எதிராகவும், கருத்துச் சுதந்திரத்துக்கு எதிராகவும் காவல்துறை செயல்பட்ட விதம் மற்றும் பாதிக்கப்பட்ட தரப்பினர் மேற்கொண்ட பதில் நடவடிக்கைகள் இதில் அடங்கும். அரசியலமைப்புச் சட்டம் அங்கீகரித்த கருத்துகளைத் தெரிவிக்கும் உரிமையில் வாக்களிக்கும் உரிமையும் அடங்கும் என்பது உச்ச நீதிமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பிரதான விடயமாகும். (தேசப்பிரிய – கருணாதிலகே எதிர்வ தேர்தல் ஆணையாளர் மற்றும் 13 பேர் (1999–1–SLR–157). உள்ளூராட்சித் தேர்தலை நடத்தக் கூடாது என்ற அரசின் முயற்சிக்கு எதிராக உச்ச நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு போன்ற விடயங்கள், கருத்து தெரிவிக்கும் உரிமையின் வரம்பிற்குள் அடங்குவதால், இந்த அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளது.**

**அட்டவணை 03 – 2023 மார்ச்: சட்ட விதிமுறைகள் அல்லது சட்டரீதியான கட்டுப்பாடுகள் – 07 சம்பவங்கள்**

| குறிகாட்டி | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| சட்ட நடவடிக்கை மேற்கொள்ளல் | 07 |
| **மொத்தம்** | **07** |

01. **தேசிய மக்கள் சக்தி ஏற்பாட்டில் மேற்கொள்ளப்பட்ட போராட்டம்மீதான தாக்குதல் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு இரு முறைப்பாடுகளை சமர்பிக்கப்பட்டமை.**

பெப்ரவரி 26 ஆம் திகதி பிற்பகல் இடம்பெற்ற ஆர்ப்பாட்ட ஊர்வலத்தின் மீது நீர், கண்ணீர்ப்புகை மற்றும் தடியடி தாக்குதல்கள் நடத்தப்பட்டு 28 பேர் காயமடைந்ததுடன் ஒருவர் கொல்லப்பட்டமை தொடர்பாக, மார்ச் 02 ஆம் திகதி, தேசிய மக்கள் சக்தி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இரண்டு முறைப்பாடுகளை சமர்ப்பித்தது.

தாக்குதலில் உயிரிழந்த நிமல் அமரசிறி சார்பிலும், அங்குத் தாக்குதலுக்கு உள்ளான சட்டத்தரணி சந்துன் யாப்பா கருணாரத்ன சார்பிலும் முறைப்பாடுகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்தத் தாக்குதலில் பாதுகாப்பு செயலாளர் கமல் குணரத்ன, பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்ரமரத்ன, மேல் மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேஷ்பந்து தென்னகோன் உட்பட 20 பேர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மூலாதாரம்: lankatruth.com

02. **தேர்தலுக்காக ஒதுக்கப்பட்ட பணத்தைத் தடுத்து வைத்தமை தொடர்பில் நிதியமைச்சின் செயலாளருக்கு உச்ச நீதிமன்றம் தடை உத்தரவொன்றை பிரப்பித்தமை.**

2023ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் உள்ளூராட்சித் தேர்தல் மற்றும் அரசாங்க அச்சகங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை நிறுத்தி வைப்பதைத் தடுத்து, நிதியமைச்சின் செயலாளர் மற்றும் சட்டமா அதிபருக்கு உச்ச நீதிமன்றம் மார்ச் 03 அன்று இரண்டு தடை உத்தரவுகளைப் பிறப்பித்தது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டாரவினால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்வதற்காகப் ப்ரீதி பத்மன் சூரசேன, ஜனக் டி சில்வா மற்றும் பிரியந்த பெர்னாண்டோ ஆகிய மூவரடங்கிய உச்ச நீதிமன்ற நீதிபதிகள் குழாம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

குறித்த மனுவில் பிரதிவாதிகளாக நிதியமைச்சின் செயலாளர் மற்றும் ஜனாதிபதி சார்பில் சட்டமா அதிபர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர். இந்த மனுமீதான விசாரணை மே 26ம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

அரசியலமைப்புச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள கருத்து தெரிவிக்கும் அடிப்படை உரிமையில் வாக்களிக்கும் உரிமையும் சேர்க்கப்பட்டுள்ளது என்பதை உச்சநீதிமன்றம் அங்கீகரித்துள்ளது. (1999-1-SLR-157)

ஆதாரம்: www.bbc.com

03. **கண்டி கோட்டாகோகமவைச் சேர்ந்த செயற்பாட்டாளர் ஒருவர் குற்றவியல் விசாரணைத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டமை.**

கண்டியைச் சேர்ந்த தனஞ்சய ரத்நாயக்க, கொழும்பிலிருந்து வந்த குற்றவியல் விசாரணைத் திணைக்கள அதிகாரிகள் குழுவினால் மார்ச் 04ஆம் திகதி பிற்பகல் கைது செய்யப்பட்டார். ஊரடங்குச் சட்டத்தை மீறியமை மற்றும் ஒழுங்கீனமான நடத்தை ஆகிய குற்றச்சாட்டின் கீழ் 2022 ஆம் ஆண்டு மே மாதம் 9 ஆம் திகதி கைது செய்யப்பட்ட அவர், மார்ச் 5 ஆம் திகதி கண்டி நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

ஆதாரம்: satahan.blog

04. **போராட்டத்தின்போது பயன்படுத்தப்பட்ட கண்ணீர் புகையின் தரம் மற்றும் எப்படி பயன்படுத்தப்பட்டது என்பது குறித்து அறிக்கை அளிக்குமாறு காவல்துறைக்கு நீதிமன்றம் உத்தரவிட்டமை.**

கடந்த பெப்ரவரி மாதம் 26ஆம் திகதி கொழும்பில் இடம்பெற்ற தேசிய மக்கள் சக்தியின் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட அந்தக் கட்சியின் நிவித்திகல பிரதேச சபை வேட்பாளர் நிமல் அமரசிறியின் மரணத்திற்கு பொலிஸாரின் கண்ணீர்ப்புகைத் தாக்குதலே காரணம் என உயிரிழந்தவர் சார்பில் முன்வைத்த குற்றச்சாட்டைக் கவனத்தில் கொண்டு கோட்டை நீதவான் திலின கமகே இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

இதன்படி, அந்த விடயங்கள் தொடர்பில் 02 வாரங்களுக்குள் அறிக்கையை வழங்குமாறு பொது ஒழுங்கு, முகாமைத்துவப் பிரிவின் பணிப்பாளருக்கு உத்தரவிடப்பட்டதனை தொடர்ந்து மார்ச் 26 ஆம் திகதி நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. போராட்டத்தில் பயன்படுத்தப்பட்ட கண்ணீர் புகைக் குண்டுகள் காலாவதியாகவில்லை என்றும், அன்றைய தினம் 26 வாயு குண்டுகள் மற்றும் 85 கண்ணீர் புகை குண்டுகள் வீசப்பட்டதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆதாரம்: 1. vivaranews.com, 2. sinhala.adaderana.lk

**05. அமைச்சர் பந்துல குணவர்தனவை கூப்பாடு இட்டு தனது எதிர்ப்பை தெரிவித்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டமை.**

கடந்த மார்ச் மாதம் 25ஆம் திகதி ஹோமாகம பிடிபன பிரதேசத்தில் சமய நிகழ்வொன்றில் கலந்துகொண்ட அமைச்சர் பந்துல குணவர்தனவிற்கு கூப்பாடு இட்டுத் தனது எதிர்ப்பைத் தெரிவித்த ஆர்.எம்.யூ சமிந்த தர்ஷன என்ற நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அமைச்சரைக் கேலி செய்தமை, மத வைபவத்திற்கு இடையூறு விளைவித்தமை, வழிபாட்டு உரிமை மீறல் ஆகிய குற்றச்சாட்டுகளின் பேரில் அவர் ஹோமாகம நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். சமய நிகழ்வுக்குத் தான் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை என்றும், நாடு நெருக்கடியில் இருக்கும்போது அமைச்சர்கள் விழாக்களை நடத்துவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் கூச்சலிட்டதாகவும் குற்றம் சாட்டப்பட்டவர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார். வழக்கு, ஆகஸ்ட் 24ம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

ஆதாரம்: mawratanews.lk

**06. கோட்டாகோகம மற்றும் மைனாகோகம மீதான தாக்குதல் தொடர்பில் தேசபந்து தென்னகோனை சந்தேக நபராகப் பெயரிடுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு நிராகரிக்கப்பட்டமை.**

மே 9, 2022 அன்று, அலரிமாளிகையில் கூடிய பொதுஜன பெரமுன ஆர்வலர்கள், அலரிமாளிகைக்கு முன்னாள் அமைந்திருந்த மைனாகோகம மற்றும் காலிமுகத்திடல் கோட்டாகோகம போராட்டக்காரர்கள்மீது தாக்குதல் நடத்திய சம்பவத்தைத் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்காததால் அவரைக் கைது செய்ய உத்தரவிடக் கோரி இந்த மனுவைத் தாக்கல் செய்தனர். ராமலிங்கம் ரஞ்சன் என்ற சட்டத்தரணி முன்வைத்த இந்த மனு, மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் நீதிபதி நிஷங்க பந்துல கருணாரத்ன மற்றும் நீதிபதி ஏ.மரிக்கார் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

ஆதாரம்: www.youtube.com

**07. வசந்த முதலிகே விடுதலை செய்யப்பட்டமைக்கு எதிராகச் சட்டமா அதிபர் உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீட்டை மேற்கொண்டமை.**

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் நீண்டகாலமாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த அனைத்து பல்கலைகழக மாணவர் ஒன்றியத்தின் அழைப்பாளர் வசந்த முதலிகேவை விடுதலை செய்யக் கொழும்பு நீதவான் எடுத்த தீர்மானம் சட்டத்திற்கு முரணானது எனத் தீர்மானித்துத் அதனைத் திருத்துமாறு இந்த மேல்முறையீட்டில் கோரப்பட்டுள்ளது. இந்த மேன்முறையீட்டு மனு மார்ச் 27ஆம் திகதி அழைக்கப்பட்டதுடன், அதனை மீண்டும் ஏப்ரல் 3ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளுமாறு கொழும்பு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஆதாரம்: www.youtube.com

## கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள்

**'கட்டமைப்புரீதியான விதிமுறைகள்" ஊடக சுதந்திரத்தின் மற்றொரு முக்கிய அங்கமாகும். ஊடக தொகுதியின் முழு கட்டமைப்பிற்கும் மற்றும் ஊடக சுதந்திரம் இயக்கப்படும் ஒட்டுமொத்த சூழலுக்கும் பொருந்தக்கூடிய 06 சாத்தியமான குறிகாட்டிகளை உள்ளடக்கியுள்ளது. அரச ஊடகமான தொலைக்காட்சி கூட்டுத்தாபனத்தின் இருப்பு தொடர்பாக எழுந்துள்ள நெருக்கடியானது இந்தக் குறிக்காட்டியில் கீழ் காணப்படும் பல்வேறுபட்ட ஊடகங்களின் இருப்பு மற்றும் மக்கள் சேவை ஒளிபரப்பு கட்டமைப்பின் இருப்பு என்ற குறிகாட்டியின் கீழ் வரும் முக்கிய விடயமாகும். மேலும் "கண்காணிப்புக் குழுக்களின் ஊடக சுதந்திரத்திற்கான செயல்திறன்சார் ஆதரவு" என்ற குறிகாட்டியின் கீழ் மூன்று சம்பவங்கள் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளது. அண்மைக் காலங்களில் இலங்கை பிரஜைகளின் பேச்சு சுதந்திரத்திற்கு எதிராகப் பொதுவாகப் பயன்படுத்தப்படும் அடக்குமுறை கருவியாகக் கண்ணீர் புகைப் பிரயோகம் மேற்கொள்ளப்படுவதுடன், கடந்த மாதத்தில் சிவில் சமூகம் மற்றும் சட்ட தரப்பினரால் பல முக்கிய தலையீடுகள் மேற்கொள்ளப்பட்டமை சம்பவங்கள் இங்கு குறிப்பிடத்தக்கது.**

**அட்டவணை 04 – 2023 மார்ச் கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள் – 04 சம்பவங்கள்**

| குறிகாட்டி | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| பல்வேறுபட்ட ஊடகங்களின் இருப்பு மற்றும் மக்கள் சேவை ஒளிபரப்பு கட்டமைப்பின் இருப்பு | 01 |
| கண்காணிப்பு குழுக்களின் ஊடக சுதந்திரத்திற்கான ஆதரவு | 03 |
| **மொத்தம்** | **04** |

**01. இலங்கையில் கருத்துச் சுதந்திரத்திற்கு எதிரான முக்கிய ஆயுதமான கண்ணீர்ப்புகைப் பிரயோகம் தொடர்பான ஆய்வு அறிக்கையை சமூக மற்றும் அமைதிக்கான மையத்தில் (CSR) வெளியிட்டமை.**

சமூகம் மற்றும் அமைதிக்கான மையத்தின் ஆராய்ச்சிக் குழுவின் ஆய்வின் அடிப்படையில் இந்த அறிக்கை, "கண்ணீர் புகை மற்றும் இருபது மில்லியன் மக்களின் கண்ணீர்" என்று தலைப்பிடப்பட்டுள்ளது. இந்த ஆராய்ச்சிக்காக, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தைப் பயன்படுத்தி பாதுகாப்புப் படையினரிடம் இருந்து கடின உழைப்பின் மூலம் பெறப்பட்ட தகவல்கள் மற்றும் இது தொடர்பான சர்வதேச ஆய்வுத் தகவல்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் வழிகாட்டுதல்களைக் கொண்டு இந்த அறிக்கை தொகுக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கை மார்ச் 7 ஆம் திகதி அன்று மருதானை சமூக மற்றும் அமைதி மையத்தில்(CSR) வெளியிடப்பட்டது.

ஆதாரம்: www.bbc.com

**02. போராட்டங்களைக் கலைக்க பொலிசார் பயன்படுத்திய கண்ணீர்ப்புகை மற்றும் நீரின் தரம்குறித்து தகவல்களை பெற்றுத்தருமாறு சட்டத்தரணிகள் குழு ஒன்று பொலிஸ் தலைமையகத்தில் இரு கோரிக்கைகளைக் கையளித்தமை.**

போராட்டத்தைக் கலைப்பதற்காகப் பொலிசார் காலாவதியான கண்ணீர்ப்புகைப் பிரயோகம் மேற்கொள்வதாகவும், மார்ச் மாதத்தில் மூன்று நாட்களுக்குள் இரண்டு பேர் உயிரிழந்துள்ளதாகவும், ஒருவர் ஆபத்தான நிலையில் உள்ளதாகவும், 28 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருவதாகவும் இந்த வழக்கறிஞர் குழுவின் உறுப்பினரான சுனில் வடகல தெரிவித்துள்ளார். சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளுக்குக் கிடைக்கப்பெறும் பதில்களின் அடிப்படையில் சட்ட நடவடிக்கை எடுக்க வழக்கறிஞர்கள் குழு எதிர்பார்க்கிறது.

ஆதாரம்: MFRM Desk

**03. அண்மையில் இடம்பெற்ற மக்கள் போராட்டத்தின்போது கண்ணீர் புகை வீசப்பட்டமை தொடர்பில் பொலிஸ் தலைமையகத்திடமிருந்து தகவல்களைக் கோரி தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் விண்ணப்பித்துள்ளமை.**

சோஷலிச இளைஞர் சங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி, அதன் தேசியக் குழு உறுப்பினர் சட்டத்தரணி ஷானிகா டி சில்வா மற்றும் பலர் இந்தக் கோரிக்கைகளை மார்ச் 10 ஆம் திகதி அன்று சமர்ப்பித்தனர். 2007 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க இரசாயன ஆயுத மாநாட்டுச் சட்டத்தின் பிரிவு 19 G1 இன் கீழ் கண்ணீர்ப்புகை தடைசெய்யப்பட்ட ஆயுதமாகக் கருதப்படுவதாகவும், இது தொடர்பாகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

ஆதாரம்: www.youtube.com

**04. இலங்கை தொலைக்காட்சி கூட்டுத்தாபனத்தில் பணியாற்றும் ஊழியர்கள் தாமாக முன்வந்து பதவி விலகும் வேலைத்திட்டம் ஒன்றை அறிவித்துள்ளமை.**

42 வருடங்களாக அரச கூட்டுத்தாபனமாக இயங்கி வரும் இலங்கை தொலைக்காட்சி கூட்டுத்தாபனத்தை இலாபம் ஈட்டும் நிறுவனமாக நடத்தும் சவாலை எதிர்கொண்டுள்ள நிலையில் இந்த வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படுவதாகப் பணிப்பாளர் நாயகம் விடுத்துள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, தானாக முன்வந்து விலகுபவர்களுக்கு இரு அடிப்படை திட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளதுடன், சேவை காலத்தைப் பொறுத்து ரூ.2.5 லட்சம் முதல் ரூ.25 இலட்சம் வரை இழப்பீடாக வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஆதாரம்: ceylonnewsfactory.lk

**அட்டவணை 5: ஊடக சுதந்திரம்: 2023 ஜனவரி முதல் மார்ச் வரையான காலப்பகுதிக்குள் சுதந்திர ஊடக இயக்கத்தால் அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை**

| உள்ளடக்கப்பட்டுள்ள குறிகாட்டிகள் | 2023 ஜனவரி | | 2023 மார்ச் |
|---|---|---|---|
| | புதிய சம்பவங்கள் | முன்னைய சம்பவங்களின் வளர்ச்சிப்போக்கு | |
| பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் | 04 | - | 10 |
| சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுப்பாடுகள் | 19 | 02 | 07 |
| ஊடக சுயாதீனத்துவம் | - | - | - |
| தொழில்சார் நிபுணத்துவம் | 01 | - | - |
| கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள் | 03 | - | 04 |
| **மொத்தம்** | **27** | **02** | **21** |

2023 ஊடக சுதந்திர உரிமைகள் கண்காணிப்பு அறிக்கை

**பின்னுரை:** சிவில் சமூக குறிக்கோள்கள், தேசிய மற்றும் சர்வதேச வழக்கு தீர்ப்புகள் மற்றும் அனைத்துலக பிரகடனங்களுக்கு ஏற்ப, ஊடக சுதந்திரம் என்பது மனித உரிமை என சுதந்திர ஊடக இயக்கம் உடன்படுவதுடன்.அனைத்து மனிதர்களுக்கும் காணப்படவேண்டிய சிந்தனை சுதந்திரம், மனசாட்சி சுதந்திரம், மதச்சுதந்திரம் மற்றும் மற்றவர்களின் கருத்துக்களை தெரிந்து கொள்வதற்கான அடிப்படை உரிமைகளை தடையேதும் இன்றி அனுபவிப்பதற்கான சுதந்திரமே மனித உரிமையாகும். இந்த அடிப்படையில் ஊடக சுதந்திரம் என்பது பின்வரும் பத்து பகுதிகளை உள்ளடக்கிய தொகுப்பு என சுதந்திர ஊடக இயக்கம் கருதுகின்றது.

(1) சிந்தனை சுதந்திரம் (2) கருத்து தரிப்பதற்கான சுதந்திரம் (3) கருத்து வெளிப்படுத்தும் சுதந்திரம் (4) அமைதியான முறையில் மேற்கொள்ளப்படும் ஒன்றுகூடல் உரிமை மற்றும் கருத்து தெரிவிக்கும் சுதந்திரம் (5) தகவல் அறியும் உரிமை (6) கேட்டல் மற்றும் பார்த்தல் வழி சார்ந்த பதிவு செய்தல் மற்றும் அறிக்கை வைத்துக்கொள்வதற்கான சுதந்திரம் (7) பதிப்புச்சுதந்திரம் (8) செய்திப்பத்திரிகை சுதந்திரம் (9) இலத்திரனியல் ஊடக சுதந்திரம் (10) இணைய சுதந்திரம். என்பனவையே இதன் பகுதிகூறுகள் ஆகும்.

இந்த ஒவ்வொரு பகுதிகளும் ஒன்றோடொன்று தொடர்பு உடையதாக காணப்படுவதனால் ஒரு பகுதிகூறுக்கு ஏற்படும் வரையறைகள் மற்றும் தாக்கங்கள் ஊடக சுதந்திரம் தொடர்பில் காணப்படும் அனைத்து பகுதிக்கூறுக்கும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை சுதந்திர ஊடக இயக்கம் ஏற்றுக்கொள்கின்றது. எனவே பொறுப்பற்று மற்றும் வெறுப்புணர்வுடன் மேலே குறிப்பிட்ட சுதந்திரங்களை அத்துமீறி அனுபவிப்பதானது சிறந்ததொரு முறையல்ல என்பதனை சுதந்திர ஊடக இயக்கம் கருதுகின்றது.

இந்த மாதாந்த அறிக்கை தயாரிக்கபடுவது பொது ஊடகத்தில் பிரசுரிக்கப்படும் மற்றும் சுதந்திர ஊடக இயக்கத்திற்கு கிடைக்கப்பெறும் தவல்களுக்கு அமைய மேலதிக தகவல்களை தேடி அறிந்து அந்த நிகழ்வுகளை ஆய்வுக்குட்படுத்திய பின்னரேயாகும்.இந்த ஆய்வின் போது சுதந்திர ஊடக இயக்கம் மேலே குறிப்பிட்ட பத்து ஊடக சுதந்திர சுட்டெண் பகுதிகளை உள்ளடக்கிய சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏழு தொகுப்புகளின் ஊடாக தேர்ந்தெடுக்கப்பட்ட அடிப்படை அளவுகோல்களை கொண்டே கண்காணிப்பு நடவடிக்கையை மேற்கொள்கின்றது.


Free Media Movement

Convener: Lasantha De Silva +94 71 166 7938, +94 77 810 7620 | Secretary: Hana Ibrahim +94 77 741 2995
Treasurer: Ananda Jayasekara +94 77 312 4850
No 96, Bernard Soysa Mw, Colombo 05. Tel: +94 112368895 Fax: +94 112368895;
Web: www.fmmsrilanka.lk, www.mediareform.lk
Email: fmmsrilanka@gmail.com | Facebook: https://www.facebook.com/fmm.srilanka
Twitter: https://twitter.com/FMMsrilanka | #FMM25


Layout: Nalinda Seneviratne